# <u>அவசர கூட்டப்பொருள்</u>

நகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு சாரா கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **83(1) (சி)** –ற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரசிதழின் எண்.**33**, நாள்.**25.01.2018–**ன் படி அறிவிக்கை செய்யப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**7234/2014/** ஆர்**1** நாள்.**28.03.2018–**ன் படி மேற்படி சட்ட திருத்தத்தின்படி நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி விதிகளில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதக்க ஏதுவாக நகராட்சி ஆணையர்களால், மன்ற அனுமதி பெற்று அறிவிப்பு வெளியிடப்பட வேண்டுமென்றும் **30** நாட்களில் பெறப்படும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து இறுதி செய்து மாவட்ட அரசிதழில் அறிவிப்பு செய்ய உரிய நடவடிக்கை தொடர தெரிவிக்கப்பட்டது. எனவே அறிவிப்பு வெளியிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்ற தீர்மானம் எண்.**134**, நாள்.**06.04.2018** –ல் மன்றம் அங்கீகரித்தன்படி **08.04.2018** அன்று தினமணி நாளிதழில், நகராட்சி பகுதிக்குட்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பது சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அறிவிப்பு கண்ட **30** தினங்களுக்குள் ஆணையருக்கு எழுத்து மூலமாக ஆட்சேபனை அனுப்பலாம் என பிரசுரிக்கப்பட்டது. இந்நிலையில் S.M.R.V மெட்ரிக் பள்ளி, வடசேரி, நாகர்கோவில் அவர்களிடமிருந்து ஒரு ஆட்சேபனை மனு வரப்பெற்றது.

மேற்படி மனுவில் **"எங்களது பள்ளி சமுதாய பள்ளி பல்வேறு சமுதாயத்தை சேர்ந்த 950 குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். முற்றிலும் இலாப நோக்கு இல்லாமல் பல ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும், பின்தங்கிய பகுதியில் இருப்பதினால் பெரும்பாலான குழந்தைகள் வசதி குறைவானவர்கள் என்பதாலும் எங்களது பள்ளியில் கல்வி பயின்று வருகிறார்கள். நகராட்சி சொத்துவரி விதித்தால் எங்களது பள்ளியில் பயிலும் குழந்தைகளிடம் தான் அதனை வசூலிக்க வேண்டியது வரும் என்பதையும் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.**

**எங்களது பள்ளியானது தனியாருக்கு சொந்தமானது இல்லை. எங்களது வள்ளியூர் சாலியர் சமுதாயத்திற்கு சொந்தமானது எங்களது வள்ளியூர் சாலியர் சமுதாயம் பிறப்பட்ட வகுப்பை சார்ந்தது. 3000 உறுப்பினர்களை கொண்டது குழந்தைகளிடம் இருந்து வசூலிக்கும் கல்வி கட்டணம் ஆசிரியர் சம்பளத்திற்கும் அரசால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத்திற்கும் சரியாக போய் விடுகிறது. எனவே உண்மை நிலையினை கண்டறிந்து S.M.R.V மெட்ரிக் பள்ளிக்கு சொத்துவரி விலக்கு வழங்க கேட்டுள்ளார்கள்.**

மேற்படி பள்ளி கட்டணம் வசூலித்து நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் சொத்துவரி விலக்கு வழங்க வழிவகை இல்லை. எனவே இதனை இறுதி செய்து மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.**4370/2018/**அ**1**

**தீர்மானம் எண். 171– அங்கீகரிக்கப்பட்டது.**